இலங்கை கடற்படை ரோந்துப் படகு மோதி கடலில் மூழ்கிய

இராமநாதபுரம் மீனவர் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 7 - இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் கடலில் மூழ்கி காணாமல்போன இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகில் சென்று திரு. மூக்கையா (வயது 54), திரு. முத்து முனியாண்டி (வயது 57), மலைச்சாமி (வயது 59) மற்றும் இராமச்சந்திரன் (வயது 74) ஆகிய நால்வரும் 01.08.2024 அன்று அதிகாலை நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அங்குவந்த இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில், மீன்பிடி விசைப்படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதில் திரு. மலைச்சாமி (வயது 59) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அவரது உடல் மற்றும்முத்து முனியாண்டி மற்றும் திரு. மூக்கையா ஆகியோர் இலங்கை கடற்படையினரால் 3.8.2024 அன்று ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், மீன்பிடி விசைப்படகு மூழ்கியதில் காணாமல் போன ராமச்சந்திரன் (வயது 74) த/பெ.வேலுதேவர் என்பவரை இந்திய கடலோரக் காவல் படை கப்பல்கள் கடந்த ஐந்து நாட்காளாக தேடியும் அவரது உடல் கிடைக்கவில்லை.

இச்சம்பவத்தில் கடலில் மூழ்கி காணாமல் போன திரு.இராமச்சந்திரன் குடும்பச் சூழ்நிலையைச் கருத்தில்கொண்டு அவருடைய குடும்பத்திற்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு - 'பெண்' குழந்தைகளைக் காப்போம்!

பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்! விழிப்புணர்வு நிகழ்ச்சி!

அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்துகொண்டு – கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 7 -

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் நேற்று (06.08.2024) சென்னை சூளைமேடு, ஜெய்கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு மற்றும் பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம், பள்ளி குழந்தைகளுக்கு பல்வேறு சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சிகள் பள்ளி குழந்தைகளிடையே சமூக விழிப்புணர்வு திறன்களை வளர்ப்பதுடன், முதியோர், பெண்களை மதிக்க கூடிய ஒரு சமுதாயம் உருவாக உறுதுணையாக உள்ளது.

மூத்த குடிமக்களை பாதுகாப்பதற்கும், அவர்கள் நலன் காக்கவும் தமிழ்நாடு அரசு அதற்கான சட்டத்தையும் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி மற்றும் பங்கேற்பினை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

•முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்(ஜீன் 15) மாநில மற்றும் மாவட்ட அளவில் 4.00 இலட்சம் செலவில் அனுசரிக்கப்படுகின்றது.

•முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தில், ஆண்டுதோறும் ரூ.92.00 கோடி நிதி ஒதுக்கீட்டில், 36800 பெண் குழந்தைகளுக்கு வைப்புத் தொகை இரசீதுகள் வழங்கப்படுகின்றது.

•18 வயது நிறைவடைந்த 72,160 பெண் குழந்தைகளுக்கு கடந்த ஆண்டு ரூ.165.93 கோடி மதிப்பீட்டில் முதிர்வுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

• குழந்தைகளின் பாதுகாப்பிற்கு உதவி எண்.1098 செயல்படுத்தப்படுகிறது.

• சத்துணவு திட்டம், முதலமைச்சரின்"காலை உணவுத் திட்டம்" மற்றும் விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

• பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கும் கற்பிப்போம் திட்டம் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ரூ.8.02 கோடி செலவில் நடத்தப்பட்டு வருகின்றது.

சென்னை சூளைமேட்டில் உள்ள ஜெய் கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி குழந்தைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நேற்று (6.08.2024) நடத்தப்பட்டது.

சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தலைமையேற்று முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு மற்றும் பெண்குழந்தைகளை காப்போம், பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்ட விழிப்புணர்வு உறுதி மொழிகளை பள்ளி மாணவர்களுடன் எடுத்துக் கொண்டு, முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மேலும் துறைசார் கண்காட்சியை பார்வையிட்டு, பள்ளிமாணவர்களிடையே நடத்தப்பட்ட விழிப்பு ணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கோப்பைகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தினை மக்களுக்கு எடுத்தும் செல்லும் வகையில் களப்பணி ஆற்றுகின்ற சமூக விரிவாக்க அலுவலர்கள், மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கு (சின்னம் அச்சிட்ட) ஓவர் கோட் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவில், 6261 அரசு பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவியர்களில் தன்னார்வலராக 5 பேரை தேர்ந்தெடுத்து, பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தை களுக்கு கற்பிப்போம் திட்ட சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பி வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தினமும் காலை இம்மாணவர்கள் இறைவணக்கத்தின் போது பெண் கல்வி மேம்பாடு, பாதுகாப்பு, குழந்தை திருமணம் தடுத்தல் மற்றும் குழந்தை உதவி எண் 1098 ஆகியவை குறித்த உறுதி மொழி எடுத்தல் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள். இவ்விழாவில் பங்கு பெற்ற அனைத்து மாணவியருக்கும் முதியோர் கொடுஞ்செயல் எதிர்ப்பு வழிமுறைகள் அடங்கிய பாடஅட்டவணை, மணிக்கட்டில் அணியும் பேண்டுகள் ஆகியவை வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அரசுச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே. அமுதவல்லி, சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் 1200க்கும் மேற்பட்ட மாணவர்களும் 60க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி!

சைதை மேற்கு பகுதிக் கழகத்தினருக்கு எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஆக.7-

முத்தமிழறிஞர் கலைஞர் 6ம் ஆண்டு நினைவு நாளையொட்டி கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று அமைதிப்பேரணி நடைபெறுகிறது.

இது குறித்து சைதை மேற்குப் பகுதி கழகச்செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வேண்டுகோள் வருமாறு:-

தந்தை பெரியாரின் மாணவராய், காஞ்சி தந்த காவியத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய், நாடு போற்றும் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசனகர்த்தாவாக, இலக்கியாவாதியாக, திரைப்படத் தயாரிப்பாளராக, தமிழகத்தில் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக, திராவிட இயக்கத்தின் போர்வாளாக, பொதுவாழ்வை தொடங்கி ஐம்பது ஆண்டுகள் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக பொறுப்பு வகித்து அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்டு

முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும், கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப்பொதுச்செயலாளர்கள், உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்துகொள்ளும் அமைதிப்பேரணி இன்று 07.08.2024 (புதன்கிழமை) காலை 7 மணியளவில் சென்னை அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் அறிவுறுத்துதலின்படி சைதை மேற்கு பகுதியை சார்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக கருஞ்சட்டை அணிந்து கழக இருவண்ணக்கொடியேந்தி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த குறிப்பிட்ட நேரத்தில் திரண்டு வாரீர் என சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் இரா.கி.பேட்டை ஒன்றியம் 9 ஊராட்சியிலும் பள்ளிப்பட்டு ஒன்றியத்திற்கு உட்பட்ட 8 ஊராட்சிக்கான மக்களிடம் முதல்வர் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து பொதுமக்களின் நிவர்த்தி செய்யப்பட்ட சான்றிதழ்களை வழங்கினார். உடன் வட்டாட்சியர்கள் பாரதி, எம்.சிவகுமார் ஒன்றிய செயலாளர்கள் பெ.பழனி, வழக்கறிஞர்சி.ஜெ.சீனிவாசன், சி.என்.சண்முகம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலைச்செல்வி, ஜி.சிவகுமார், ஒன்றிய குழு துணை தலைவர் திலகவதி ரமேஷ் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தி செங்குட்டுவன் மற்றும் சிலம்பு பன்னீர்செல்வம் உள்பட பலர் உள்ளனர்

திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வெங்கத்தூர், மேல்நல்லாத்தூர், கீழ்நல்லாத்தூர், போளிவாக்கம், நுங்கம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளுக்காக மணவாள நகர் அடுத்த ஒண்டிகுப்பம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மகாலில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபு சங்கர் ஐ.ஏ.எஸ்., தலைமையில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. ராஜேந்திரன் முன்னிலையில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் க. திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர். டி.இ. ஆதிசேஷன், கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மணி சேகர் செல்வகுமாரி, அரசு துறைகளின் மாவட்ட, ஒன்றிய அளவிலான அலுவலர்கள், ஒன்றிய செயலாளர்கள் க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பாக்குப்பேட்டை நாகராஜ் , மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ். நேதாஜி, திருவள்ளூர் நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், வெங்கத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஆர். மோகனசுந்தரம் , மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் என். நந்தகோபால், ஒன்றிய நிர்வாகிகள் சி. ஆர். குமரன், கொப்புர் டி.திலீப்குமார், எல்லப்பன்,ஆர். வாசு, ஆர். சேகர், முருகன், கார்த்தி உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள், மற்றும் 1000 – ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

உத்திரமேரூர் தொகுதி களையாம்பூண்டியில்

மக்களுடன் முதல்வர் முகாம்

க.சுந்தர் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கினார்

காஞ்சிபுரம், ஆக. 7 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் களியாம்பூண்டி ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளியில் நேற்று (6-08-2024) காலை 10.30 மணியளவில் நடைபெற்ற நிகழ்ச்சியினை மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடக்கி வைத்து கோரிக்கை மனுக்களை பெற்று, நல திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்சியில் உத்திரமேரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய கழக செயலாளர் .கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என். எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் பொ.சசிகுமார் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அண்ணன் இரா. நாகன், ஒன்றிய கவுன்சிலர்கள் சுகுணா சுந்தர்ராஜன், தயாளன், அண்ணாதுரை, களியாம்பூண்டி ஊராட்சி மன்ற தலைவர் வளர்மதி சுதாகர் , இளைஞர் அணி யுவராஜ் துணை அமைப்பாளர் கோபிநாதன், ஆதி, பரணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், கழக அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தலைவர்க்கும் தலைவர் கலைஞர் தமிழர் நெஞ்சம் வாழ்வார்!

அள்ளமுதப் பால்தந்தார் அஞ்சுகத்தாய் - முத்துவேல்!
ஆளுமையின் தந்தைவழி. வளர்ந்தார்
பள்ளியிலே பயில்கின்ற போதே - கொள்கைப்
பைந்தமிழின் வாழ்வுக்கே கொடிபிடித்தார்!
எள்ளியோர்கள் தம்மையெல்லாம் எளிதாய்த் தன்னின்
எண்ணத்தின் வலிமையினால் வென்றார்
வெள்ளத்தின் வேகம்போல் முயன்றார் - தி.மு.க.
வெற்றிமிகு வளர்ச்சிக்கே முதன்மையானார்!

தந்தைநம் பெரியாரின் உள்ளம் - தன்னில்
தன்னேரில் பெருமைதரும் இடம்பிடித்தார்
எந்தைதனைப் பிரிந்துஅண்ணா தி.மு.க. - இயக்கம்
இருவிழிகண் ணீர்சொரியக் காணப்
புண்ணிதயம் மாற்றுகின்ற மருந்தும் - ஆனார்!
புதுமை அண்ணா ஆறுதலாய் இருந்தார்
கண்ணியம்கட மைகட்டுப் பாட்டின் - ஈகக்
களம்கண்டார் காலத்தால் தலைமைஏற்றார்!

கலைத்துறையில் வேறெவரும் காணா - வெற்றிக்
காவியங்கள் பலபடைத்தே ஒளிர்ந்தார்
அலைகடல்போல் ஓயாத உழைப்பால் பல்துறை
ஆற்றலிலும் வியப்போங்கும் **கலைஞர்**
தலைவர்க்கும் தலைவராகி உயர்ந்தார் - உச்சம்
தனைத்தொட்டுத் தமிழ்நாட்டை மேன்மேல் ஓங்கும்
நிலைஉயர்த்தும் அருட்புதல்வர் கைதந்தே - சென்றார்
நெடுங்காலம் தமிழர்தம் நெஞ்சம் வாழ்வார்!

மீட்சிகள்தாம் தமிழர்கள் என்றென்றைக்கும்
மீதூர்ந்தே **வெல்லாட்சி மு.க.இஸ்டாலின்**
ஆட்சிதிரா விடமாதிரி ஆட்சிபோல - இந்தியா
ஆளும்நிலை எங்குமில்லை என்றநிலை
மாட்சிநிலை மோடிதரும் மோசடியைப்-புறம்காண்
மாண்பாட்சி வினைத்திட்ப ஊக்கம் ஆக்கம்
நீட்சிதரும் கலைஞர்தாம் பாதுகாவல்-தளபதி
நிறைவுண்ணமை ஆட்சிமேன்மேல்
வளர்கமாதோ!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்
உலக அமைப்பாளர்
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆலப்பாக்கம் கு.சண்முகம்
ஆகஸ்ட் 7 (2023)

1975ஆம் ஆண்டு ஆலப்பாக்கம் கிளைக் கழக பிரதிநிதியாகவும் பின்னர், கிளைச் செயலாளர், மூன்று முறை வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர், மதுரவாயல் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு கழகப் பொறுப்புகள் வகித்து தனது பகுதியில் கழகம் வளர்த்தவர்.

2006ல் மதுரவாயல் நகர்மன்றத் தலைவராகவும், 2022ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி சுகாதார நிலைக்குழு உறுப்பினராகவும், சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

2023ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளன்று நடைபெற்ற அமைதி பேரணியில் கலந்து கொண்ட வழியிலேயே திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பில் மறைவெய்தியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.